


dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253


# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 289 | 4 Pages | 16.5.2025 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 289 | 4 பக்கங்கள் | 16.5.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்**
**தன்நெஞ்சே தன்னைச் சுடும்**

**விளக்கம்:**
ஒருவன் தன் நெஞ்சம் அறிவதாகிய ஒன்றைக்குறித்துப் பொய்ச் சொல்லக்கூடாது, பொய் சொன்னால் அதைக்குறித்துத் தன் நெஞ்சமே தன்னை வருத்தும்.

## போர் நிறுத்த விவகாரம்: நாடு முழுவதும் பொதுக்கூட்டம் நடத்த காங்கிரஸ் முடிவு




புதுடெல்லி, மே.16

டெல்லியில், காங்கிரஸ் அலுவலகத்தில் காங்கிரஸ் மூத்த தலைவர்கள் ஆலோசனை கூட்டம் நடந்தது. அதன்பிறகு, காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ், ஊடகப்பிரிவு தலைவர் பவன் கேரா ஆகியோர்கூட்டாக செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தனர்.

அவர்கள் கூறுகையில், "இந்தியாபாகிஸ்தான் இடையே சண்டை நிறுத்தம் ஏற்பட மத்தியஸ்தம் செய்ததாக அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் கூறியுள்ளார். ஆனால் அதுபற்றி பிரதமர் மோடி மவுனம் சாதித்து வருகிறார். எனவே, அவரது மவுனம் குறித்து கேள்வி எழுப்புவதற்காக நாடு முழுவதும் 'ஜெய்ஹிந்த்' என்ற பெயரில் பொதுக்கூட்டங்கள் நடத்த காங்கிரஸ் கட்சி முடிவு செய்துள்ளது. 16ந் தேதி, எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி நிருபர்களுக்கு பேட்டி அளிப்பார்" என்று கூறினர்.

## மத்திய மந்திரி ஜெய்சங்கருக்கு பாதுகாப்பு அதிகரிப்பு



புதுடெல்லி, மே.16

மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய் சங்கர் இசட் பிரிவு பாதுகாப்பில் உள்ளார். சமீபத்தில் நடைபெற்ற இந்தியாபாகிஸ்தான் மோதலைத்தொடர்ந்து அவரது பாதுகாப்பு குறித்து உயர்மட்டக்குழு ஆலோசித்தது.

அதன் அடிப்படையில் அவருக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே அவருக்கு கூடுதலாக 2 குண்டு துளைக்காத கார்கள் வழங்கப்பட்டனஎன்றுமத்தியஅரசுவட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் டெல்லியில் உள்ள அவரது வீட்டைச் சுற்றி பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 24 மணி நேரமும் அவரைப் பாதுகாக்க 33 கமாண்டோக்கள் கொண்ட குழு நிறுத்தப்பட்டுள்ளது.

முன்னதாக பஹல்காம் தாக்குதலுக்கு பதிலளிக்கும் விதமாக இந்தியா மேற்கொண்ட ஆபரேஷன்சிந்தூர்குறித்துஅவர்பல்வேறுஉலகத்தலைவர்கள் மற்றும் பல்வேறு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களிடம் பேசி வருகிறார். இத்தகையச் சூழலில்தான், ஜெய்சங்கர் பாதுகாப்பு அதிகரிப்பு தொடர்பான செய்தி வந்துள்ளது. மேலும், ஒட்டுமொத்தமாக, வி.ஐ.பி.களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள்பலப்படுத்தப்பட்டுள்ளனஎன்றும்தகவல்வெளியாகி உள்ளது.

## மணிப்பூர்: இந்தியாமியான்மர் எல்லையில் 10 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை



மணிப்பூர், மே.16

இந்தியமியான்மர் எல்லை அருகே நேற்று (மே 14) இரவு மணிப்பூரின்சண்டல் மாவட்டத்தில் நடந்த ஒரு துப்பாக்கிச் சண்டையில், பாதுகாப்புப் படையினர் 10 ஆயுதமேந்திய பயங்கரவாதிகளை சுட்டுக்கொன்றனர்.

கெங்ஜாய் தெக்சிலில் உள்ள நியூ சாம்தால் கிராமத்திற்கு அருகே பயங்கரவாதிகள் நடமாட்டம் குறித்த உளவுத்துறை தகவலின் அடிப்படையில், அசாம் ரைபிள்ஸ் பிரிவு மற்றும் இந்திய ராணுவத்தின் கிழக்கு கட்டளையின் ஸ்பியர் கார்ப்ஸ் ஆகியவற்றால் இந்த நடவடிக்கை நிகழ்த்தப்பட்டது.

இதுதொடர்பாக கிழக்கு கட்டளை அதிகாரிகள் வெளியிட்ட தகவல்படி, தேடுதல் நடவடிக்கையின் போது அதிக ஆயுதமேந்திய பயங்கரவாதிகளை எதிர்த்து, ராணுவ வீரர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். பாதுகாப்புப் படையினர் விரைவாக கொடுத்த பதிலடி காரணமாக 10 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். அந்த இடத்திலிருந்து ஒரு பெரிய ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் மீட்கப்பட்டன.

இந்த சம்பவம் தொடர்பான கூடுதல் விவரங்கள் விரைவில் வெளியிடப்படும். நடுநிலைப்படுத்தப்பட்ட படைப்பிரிவுகளின்அடையாளம் மற்றும் குழு இணைப்பு இன்னும் வெளியிடப்படவில்லை. சமீபத்திய தகவலின்படி, கூடுதல் படைகள் அப்பகுதியில் நிறுத்தப்பட்டுள்ளன, மேலும் பயங்கரவாதிகளைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

## நீதிபதி யஷ்வந்த் வர்மாவுக்கு எதிரான மனு: அவசரமாக விசாரிக்க சுப்ரீம் கோர்ட்டு மறுப்பு



புதுடெல்லி, மே.16

அலகாபாத் ஐகோர்ட்டு நீதிபதி யஷ்வந்த் வர்மா, இதற்கு முன்பு டெல்லி ஐகோர்ட்டு நீதிபதியாக பணியாற்றினார். அப்போது,மார்ச்மாதத்தில் அவரது டெல்லி வீட்டில் தீவிபத்து ஏற்பட்டது. ஒரு அறையில், பாதி எரிந்த நிலையில், கோடிக்கணக்கான ரூபாய் நோட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

சுப்ரீம்கோர்ட்டுதலைமைநீதிபதிஉத்தரவிட்டஉள்மட்டவிசாரணையில் இது உறுதி செய்யப்பட்டது. இதற்கிடையே, நீதிபதி யஷ்வந்த் வர்மா மீது வழக்குப்பதிவு செய்ய உத்தரவிடக்கோரி மேத்யு நெடும்பரா உள்பட 4 பேர் சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தனர்.

அந்த மனுவை அவசர விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய், நீதிபதி அகஸ்டின் ஜார்ஜ் மசி ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு மனுதாரர்களின் வக்கீல் ஆஜராகி கேட்டுக்கொண்டார். ஆனால், உரிய நடைமுறைகளை பின்பற்றுமாறு வக்கீலிடம் கூறிய நீதிபதிகள், அவசர விசாரணைக்கு பட்டியலிட மறுத்து விட்டனர்.

# பொள்ளாச்சி சம்பவம்: பாதிக்கப்பட்ட பெண்களுக்கு கூடுதல் நிவாரணம்: மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, மே.16

பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை குற்றச்செயலில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு கோர்ட்டு உத்தரவிட்ட தொகைக்கும் கூடுதலாக நிவாரணத்தொகை உயர்த்தி வழங்க தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

2019 ஆண்டு நடைபெற்ற பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை சம்பவம்தமிழ்நாட்டு மக்களிடையேகடும் அதிர்ச்சியை உண்டாக்கியது. தமிழ்நாட்டில் பெண்களுக்கு எதிராக நிகழ்ந்த மிகக்கொடுமையான குற்ற சம்பவமாக கருதப்படும் இந்த வழக்கை விசாரணை செய்த கோயம்புத்தூர் மகளிர் கோர்ட்டு சமீபத்தில் வழங்கிய தீர்ப்பு பொதுமக்களிடையே நல்ல வரவேற்பினைப் பெற்றது. இந்த கொடுஞ்செயல்களில் ஈடுபட்ட குற்றவாளிகள் 9 பேருக்கும் சாகும்வரை ஆயுள் தண்டனை என வழங்கப்பட்டுள்ள கடுமையான தண்டனை குற்றசெயலில் ஈடுபட முனைவோருக்கு ஒரு கடுமையான எச்சரிக்கையாக இருக்கும்.

தற்போது தமிழ்நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்கி பெண்களுக்கு பல்வேறு வகைகளிலும் அதிகாரம் அளித்திட தமிழ்நாடு அரசு சிறந்த முயற்சிகளை எடுத்துள்ளது. தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் தோழி விடுதிகள், புதுமைப் பெண், நான் முதல்வன் போன்ற முன்னோடி திட்டங்களின் விளைவாக மாநிலத்தில் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் இரண்டிலும் மாணவிகளின் சேர்க்கை அதிகரித்து உள்ளது. இந்தியா முழுவதும் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களில் 41 சதவீதம் பேர் இம்மாநிலத்தில் பணிபுரிகின்றனர்.

பெண்களின் பாதுகாப்பிற்கு அரணாகத் திகழக்கூடிய திராவிட மாடல் அரசு, பெண்களுக்கு எதிராகக் குற்றச்செயலில் ஈடுபடுவதற்கு அஞ்சிடும் வகையில் பெண்களுக்குத் துன்பம் விளைவித்தலை தடை செய்கின்ற சட்டத்தை சமீபத்தில் திருத்தம் செய்து குற்றச்செயல்களுக்கான தண்டனையை மிகவும் கடுமையாக்கி உள்ளது.

மேலும், இந்திய தண்டனைச் சட்டத்திலும் பெண்களுக்கு எதிரான தண்டனையை கடுமையாக்கும் விதமாக உரிய சட்டத்திருத்தத்தினை சமீபத்தில் நடைபெற்ற சட்டமன்ற கூட்டத்தொடரில் நிறைவேற்றி ஒன்றிய அரசின் ஒப்புதலுக்காக தமிழ்நாடு அரசு அனுப்பி வைத்துள்ளது. இதனால்,

குற்றவாளிகள் தங்கள் குற்றங்களுக்கு கடுமையான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும். இவ்வழக்கில் கடந்த 13.05.2025 அன்று கோயம்புத்தூர் மகளிர் கோர்ட்டு வழங்கிய தீர்ப்பில், பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மொத்தமாக ரூ.85 லட்சம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தவழக்கில் பாதிக்கப்பட்ட பெண்கள் தைரியமாக முன்வந்து புகார் அளித்தது மட்டுமல்லாமல் கோர்ட்டு விசாரணைக் குழு ஒத்துழைப்பும் அளித்ததன் அடிப்படையிலேயே இந்த வழக்கில் குற்றவாளிகளுக்குதண்டனைகிடைத்துள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைத்துள்ளது. அத்தகைய நியாயத்திற்காகதுணிச்சலுடன்போராடிய பெண்களின் தைரியம் பாராட்டுக்குரியது. அந்த வகையில், கோர்ட்டு உத்தரவிட்ட மொத்த நிவாரணத் தொகையாகிய ரூ.85 லட்சத்திற்கும் கூடுதலாக பாதிக்கப்பட்ட பெண்கள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.25 லட்சம் என நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்கிட தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்கள்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# Global Inside24 இன் ஊடக அனுசரணையுடன் மலேசியாவில் சித்திரபௌர்ணமியை முன்னிட்டு நடந்த கலாச்சார கலை நிகழ்வு

Global Inside24 இன் ஊடக அனுசரணையுடன் 11 மே 2025 திகதி மாலை 7.00 மணி முதல் இரவு 11.30 மணி வரை Tapak Teluk intan bazar ramadan (சபா இந்து கோயில் அருகில்) சித்திரபௌர்ணமியை முன்னிட்டு, பாரம்பரியத்தையும் கலாச்சாரத்தையும் சிறப்பிக்க நடைபெற்ற Shining Starz ஏற்பாட்டில் நடைபெற்ற ஒரு சிறப்பான "கலாச்சார கலை நிகழ்ச்சி" மிகுந்த வெற்றியுடன் நிறைவடைந்தது.

இந்த நிகழ்ச்சியை Mr. Sivabalan Muniandy மற்றும் Sadhanai Sudarmamani Master Ugaantarun Sugumar ஆகியோர் ஒருங்கிணைத்தனர். இந்த நிகழ்ச்சி Mr. Navinathan, Madam Sai Thilagam, Ms Kheeshalini (Persatuan Penganut Sri Guru Sri Di Nathar) அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

அவருடைய பெருமைக்குரிய வருகையும், நிகழ்ச்சியை திறந்து வைத்ததற்கும், அவரது ஒத்துழைப்பிற்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.



நிகழ்வில் பங்கேற்ற முக்கிய விருந்தினர்கள்: Mr. Navinathan, Madam Sai Thilagam, Ms kheeshalini (Persatuan Penganut Sri Guru Sri Di Nathar) Bob Krinskey Joseph ( B.S. PIPE WORKS & ENGINEERING SDN BHD ) Mr. Siva (TD Harvithaa Enterprise) Simon Alexzander (JTS Solution) IR.B.Sathia Balah, PBM, Msc(UTM) BEng (Hons) Civil Eng (London) U.K

மேடை தொகுப்பாளர்களாக எம்சி பிரஷ்ணா மற்றும் கதிர் ராவன் சிறப்பாக வழிநடத்தினார்கள். ' Shining Starz' நடனக் குழுவின் சிறப்பு நடனம், SJK(T) லாடாங் சிலாபா மாணவர்களின் ஆன்மீக நாடகம், ஓம் சக்தி உருமி மேளம், மற்றும் பாடகிகள் சுகன்யா மற்றும் வைஷ்ணவி ஆகியோரின் இசை நிகழ்ச்சிகள் பார்வையாளர்களை மிகவும் மகிழ்வித்தன.

இந்த நிகழ்ச்சி பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் ஒற்றுமையை பிரதிபலிக்கும் ஒரு அரிய விழாவாக அமைந்தது.

முடிவில், நிகழ்வில் பங்கேற்ற அனைத்து விருந்தினர்களுக்கும், கலைஞர்களுக்கும், மற்றும் மக்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி மற்றும் அன்பான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்!

# விற்பனை செய்யப்பட்ட இடத்திற்கான மீதி தொகையை வழங்காமல் மிரட்டல் விடும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி பாதிக்கப்பட்ட நபர் திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார்

திருப்பூர்,

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் நேதாஜி வீதி பகுதியை சேர்ந்தவர் ரவிச்சந்திரன். யாருமே விருது பெற்றோர்கள் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டனர் இவருக்கு இரண்டு அண்ணன்கள் உள்ளனர் இருவரும் மனவளர்ச்சி குன்றியவர்கள். அவர்கள் இருவரையும் ரவிச்சந்திரன் பராமரித்து வருகிறார். இந்த நிலையில் ரவிச்சந்திரன் தாயாருக்கு சொந்தமான இடம் தாராபுரம் தாளவாய்பட்டினம் பகுதியில் இரண்டு ஏக்கர் நிலம் உள்ளது. அதன் அருகிலேயே ரவிச்சந்திரனின் பெரியம்மா மகன் இளங்கோவனுக்கு சொந்தமான 4 ஏக்கர் நிலம் உள்ளது. இளங்கோவன் சம்மதத்து



டன் மொத்தம் உள்ள ஆறு ஏக்கர் நிலத்தை விற்க ரவிச்சந்திரன் நடவடிக்கை மேற்கொண்டார். ஏக்கர் 25 லட்சம் வீதம் தாராபுரத்தை சேர்ந்த ஸ்டாலின் மற்றும் சுகுமார் ஆகியோருக்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த சூழலில் இளங்கோவன் ஒரு விபத்தில் இறந்து விட்டார். இந்த நிலையில் எனக்கு வர வேண்டிய 40 லட்சம் பணத்தை தராமல் ஸ்டாலின் மற்றும் சுகுமார் ஏமாற்றி வருவதாகவும் இது குறித்து கேள்வி கேட்டால் கொலைசெய்துவிடுவதாகமிரட்டியும் வருகின்றனர். இந்த தொடர்பாக பல கட்ட பேச்சு வார்த்தைகளுக்கு பின்னர் தனக்கு வரவேண்டிய 40 லட்சம் பணத்துடன் 25 லட்சம் சேர்த்து மொத்தமாக கொடுத்து விடுவதாக கூறிய ஸ்டாலின் மற்றும் சுகுமார் அந்த பணத்தை தராமல் சுமார் 4 ஆண்டுகளாக ஏமாற்றி வருகின்றனர். ஒவ்வொரு முறை கேட்க செல்லும் பொழுது இந்த வார்த்தைகள் பேசுவதுடன் கொலை செய்வதாக மிரட்டியும் வருகின்றனர். எனவே மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுத்து எனது பணத்தை மீட்டு தர வேண்டும் அப்பொழுதுதான் எனது அண்ணன்களின் மருத்துவ செலவிற்கு பயன்படுத்த முடியும் என தெரிவித்தார்.

## தேனி - பெரியகுளம் பைபாஸ் சாலையில் விபத்து: அரசு பேருந்து மோதி 20 மாடுகள் பலி




தேனி மாவட்டம் மஞ்சநாயக்கன் பட்டி, ராஜதானி தெற்குத் தெருவைச் சேர்ந்ததனசேகர்என்பவர் தென்கரை காவல் நிலையத்தில் அளித்த புகாரின் அடிப்படையில், கடந்த 14.05.2025 அன்று இரவு சுமார் 10.10 மணியளவில், அவரது மாடுகள் T.கள்ளிப்பட்டி பைபாஸ் அருகே சாலையை கடக்கும்போது TN57N2160 என்ற அரசு பேருந்து அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டப்பட்டதால் மாடுகளில் மோதியது.

இந்த கோர விபத்தில் 16 மாடுகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தன. மேலும், சில மாடுகள் காயமடைந்து இருட்டில் ஓடியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக, பேருந்து ஓட்டுனர் அழகர்சாமி மீது சம்பந்தப்பட்ட சட்டப்பிரிவுகளின் கீழ் தென்கரை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.



எலக்ட்ரோபதி மருத்துவ அங்கீகாரம் வேண்டி ஒருங்கிணைந்த மருத்துவ பட்டதாரிகள் கூட்டமைப்பின் சார்பில் எலக்ட்ரோபதி மருத்துவ அங்கீகாரம் வேண்டி தமிழ்நாடு சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனின் அறிவுறுத்தலின்படி மே மாதம்12ம் தேதி அரும்பாக்கத்தில் உள்ள ஆணையர் இந்திய மருத்தும் மற்றும் ஹோமியோபதி துறை தமிழ்நாடு அவர்களிடம் எலக்ட்ரோபதி மருத்துவ அங்கீகார கோரிக்கை மனு அதன் தலைவர் டாக்டர். ரெவிஜெஸ்டின்ராஜால் வழங்கப்பட்டது.



# சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த வாலிபர் குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது

கோயம்புத்தூர் மே.16
கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி அருகே ஆழியாறுபோலீஸ்நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் 13 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுக்கப்பட்டதாக சிறுமியின் பெற்றோர் போலீசில் புகார் கொடுத்தனர். இந்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து அங்கலக்குறிச்சியை சேர்ந்த தினேஷ் குமார்(25 வயது) என்பவரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இதற்கிடையில் கோவை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு கார்த்திகேயன், குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் தினேஷ்குமாரை கைது செய்ய, கலெக்டருக்கு பரிந்துரை செய்தார். இதைத்தொடர்ந்து அவர், தினேஷ்குமாரை குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்ய உத்தரவு பிறப்பித்தார். அதன்படி தினேஷ் குமாரை போலீசார் குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்தனர்.

# அழகில் மயங்கினேன் இளம்பெண்ணை பலாத்காரம் செய்ய முயன்ற புரோட்டா மாஸ்டர் வாக்குமூலம்



சென்னை, மே.16
சென்னை பெருங்குடியில் ஐ.டி. ஊழியரான கேரளாவை சேர்ந்த இளம் பெண் (24) ஒருவர் நேற்று முன்தினம் நள்ளிரவு சுமார் 1.30 மணியளவில் பணி முடிந்து வீட்டுக்கு நடந்து சென்றுகொண்டிருந்தார். அப்போது அவரை பின் தொடர்ந்து வந்த வாலிபர் ஒருவர் இளம்பெண்ணின் வாயை பொத்தி பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டார். இதனை சற்றும் எதிர்பாராத அந்த பெண் அதிர்ச்சி அடைந்து வாலிபரிடம் இருந்து தப்பிக்க முயன்றார்.

பின்னர் வாலிபரிடம் இருந்து விடுபட அவரது கையை கடித்து விட்டு தப்பிக்க முயற்சித்து சத்தம் போட்டு உள்ளார். இந்த சத்தம் கேட்டதும் அப்பகுதியில் கால் பந்து விளையாடிக்கொண்டுஇருந்தவர்கள் ஓடி வந்தனர். இதை கண்டதும் வாலிபர் ஓடிவிட்டார். பின்னர் இளம்பெண்ணை மீட்ட இளைஞர்கள் போலீசுக்கு தகவல் தந்தனர்.

இச்சம்பவம் குறித்து தகவல் அறிந்த துரைப்பாக்கம் போலீசார்வந்து பெண் என்ஜினீயரான கேரள பெண்ணிடம் விசாரித்தனர். அவர் நடந்த சம்பவங்களை விளக்கி கூறினார். இதையடுத்து துரைப்பாக்கம் போலீசார் வழக்கு பதிவு செய்து பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டு தப்பி சென்றவர் யார்? என அங்குள்ள கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்தனர்.

அப்போது பெண்ணின் பின்னால் சென்ற வாலிபர் பற்றி துப்பு துலங்கியது. அவர் அதே பகுதியில் உள்ளஓட்டலில்புரோட்டா மாஸ்டராக வேலை செய்து வரும் ராமநாதபுரம் மாவட்டம் கமுதியை சேர்ந்த லோகேஷ்வரன் (வயது 24) என்பவர் என தெரியவந்தது. இதையடுத்து உடனடியாக நேற்று அதிகாலை 4 மணியளவில் அந்த ஓட்டலுக்கு சென்று அங்கே பதுங்கி இருந்தலோகேஷ்வரனை கைது செய்தனர்.

விசாரணையின்போது போலீசாரிடம் லோகேஷ்வரன் கூறுகையில், "நான் வேலை செய்யும் ஓட்டலுக்கு பெண் என்ஜினீயர் சாப்பிட வருவார். அவரது அழகில் மயங்கிய நான் அடைய வேண்டும் என திட்டமிட்டேன். ஓட்டலுக்கு செல்லாமல் விடுமுறை எடுத்து மது அருந்தினேன். இரவு தனியாக நடந்து செல்லும் அந்த பெண்குறித்து ஞாபகம் வந்தது. இதையடுத்து பழைய மாமல்லபுரம் சாலையில் அவர் தனியாக நடந்து சென்ற போது பின்தொடர்ந்தேன்.

அவர் தங்கியிருக்கும் குடியிருப்பு அருகே அவர் சென்ற போது வாயை பொத்தி அருகில் உள்ள மறைவான இடத்துக்கு தூக்கி சென்று கற்பழிக்க முயன்றேன். ஆனால் அவர் கூச்சலிட்டதில் அக்கம்பக்கத்தினர் ஓடிவந்ததால் அங்கிருந்து தப்பி ஓடி விட்டேன் என வாக்குமூலமாக கூறி உள்ளதாக போலீசார் தெரிவித்தனர்.

இதையடுத்து துரைப்பாக்கம் போலீசார் பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம், பாலியல் அத்துமீறல் உள்ளிட்ட 4 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். போலீஸ் விசாரணையின் போது, லோகேஷ்வரன் கழிவறைக்கு சென்ற போது வழுக்கி விழுந்ததில் இடது கையில் முறிவு ஏற்பட்டு மாவு கட்டு போடப்பட்டு உள்ளதாக போலீசார் தெரிவித்தனர்.

# அரசு மருத்துவக் கல்லூரிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும் ஓ. பன்னீர்செல்வம்



சென்னை, மே.16
தமிழ்நாடு முன்னாள் முதல்அமைச்சர் ஓ. பன்னீர் செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

"அரசு மருத்துவமனைகளில் உள்ள காலிப் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படுவதோடு, ஒப்பந்த நியமன முறையில் பணியாற்றும் மருத்துவர்களும், செவிலியர்களும் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள்" என்று தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இதற்குமுற்றிலும் முரணான சூழ்நிலை தற்போது அரசு மருத்துவக் கல்லூரிகளில் நிலவுகிறது.

தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து, ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகள் சிலவற்றில் நிலவும் குறைகளைச் சுட்டிக்காட்டி தேசிய மருத்துவ ஆணையம் விளக்கம் கேட்பதும், அதற்கு தி.மு.க. அரசு சப்பைக் கட்டு கட்டி பதில் அளிப்பதும் வாடிக்கையாகிவிட்டது. ஆனால், இந்த ஆண்டு மொத்தமுள்ள 36 அரசு மருத்துவக் கல்லூரிகளில் 34 அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு ஆசிரியர்கள் பற்றாக்குறை, தரவுக் குறைபாடுகள் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி தேசிய மருத்துவ ஆணையம் விளக்கம் கேட்டுள்ளது. இந்த அறிவிக்கை ஒன்றே தி.மு.க. அரசு எந்த அளவுக்கு மோசமாக செயல்படுகிறது என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டு.

பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பியல், தோல் மருத்துவம் உள்ளிட்ட 96 சதவீத துறைகளில் காலிப் பணியிடங்கள் உள்ளன என்றும், உதாரணத்திற்கு செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரியில் உள்ள 20 துறைகளில் 19 துறைகளில் ஆசிரியர் பற்றாக்குறை உள்ளது என்றும், இதேபோன்று சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரியில் உள்ள 20 துறைகளில் 8 துறைகளில் ஆசிரியர் பற்றாக்குறை உள்ளது என்றும் தேசிய மருத்துவ ஆணையத்தின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகள் அளித்த மேற்படி தரவுகளின் அடிப்படையில், தேசிய மருத்துவ ஆணையம் தற்போது விளக்கம் கேட்டுள்ளது.

இதுகுறித்து கருத்து தெரிவித்த மருத்துவக் கல்வி இயக்குநர், உதவிப் பேராசிரியர், இணைப் பேராசிரியர் மற்றும் பேராசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருவதாகவும், பெரும்பாலானோர் ஒரு சில நாட்களில் பணியில் சேர்ந்து விடுவர் என்றும் தெரிவித்துள்ளார். ஆனால், இதற்கு முற்றிலும்மாறானகருத்துகளை மருத்துவர்களுக்கான அமைப்புகள் தெரிவிக்கின்றன. கடந்த மூன்று ஆண்டுகளாக உரிய நேரத்தில் கலந்தாய்வு மற்றும் பதவி உயர்வு அளிக்காததன் காரணமாக, தற்போதுள்ள காலிப் பணியிடங்களை நிரப்புவது இயலாத ஒன்று என்றும், தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் 30 சதவீத அளவுக்கு ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன என்றும், 2023ம் ஆண்டிற்கான கலந்தாய்வே இப்பொழுதுதான் முடிந்து இருக்கிறது என்றும், தேசிய மருத்துவ ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி மருத்துவர்களின் எண்ணிக்கையை அரசு உயர்த்த தவறிவிட்டது என்றும் அரசு மருத்துவர்களுக்கான பல்வேறு சங்கங்கள் தெரிவிக்கின்றன.

அரசு மருத்துவக் கல்லூரிகளில் நிலவும் பல்வேறு குறைபாடுகளுக்காக ஒரு கோடி ரூபாய் வரை அரசு மருத்துவக்கல்லூரிகள் மீது அபராதம் விதிக்க சட்ட விதிகளில் வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது. இதன்படி பார்த்தால், 34 அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு 34 கோடி ரூபாய் மக்கள் பணம் விரயம் என்பதோடு, மருத்துவ மாணவர்களின் கல்வி வெகுவாக பாதிக்கப்பட்டு இருக்கிறது.

தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையில் அரசு மருத்துவமனைகளில் காலிப் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படும் என்று சொல்லிவிட்டு, ஆட்சி முடியும் தருவாயில் கூட காலிப் பணியிடங்களை நிறைவேற்றாதது வெட்கக்கேடானது. இதற்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டிலாவது அரசு மருத்துவக் கல்லூரிகளில் காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து 18ந்தேதி விண்ணில் பாய்கிறது பி.எஸ்.எல்.வி. சி61 ராக்கெட்



சென்னை, மே.16
துருவ செயற்கைக் கோள் ஏவுதள வாகனம் (PSLVC61) மூலம் பூமி கண்காணிப்பு செயற்கைக்கோள் RISAT1B இன் பெரிய ஏவுதலுக்காக இந்தியா தயாராகி வருகிறது.

இதன்படி இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரி கோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து வருகிற 18ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 6.59 மணிக்கு பி.எஸ்.எல்.வி. சி61 ராக்கெட்டை விண்ணில் ஏவுகிறது.

இந்த ராக்கெட்டில் 1,710 கிலோ எடை கொண்ட இ.ஓ.எஸ்09 என்ற பூமி கண்காணிப்பு செயற்கைக்கோள் பொருத்தப்பட்டுள்ளது. இந்தியாவின் வளர்ந்து வரும் பூமி கண்காணிப்பு பணியில் இந்த செயற்கைக்கோளும் ஈடுபடுத்தப்பட உள்ளது.

இதன் மூலம் நாட்டின் பரந்த நிலப்பரப்பில் நிகழ் நேர புகைப்படங்கள் உள்ளிட்ட பல்வேறு தரவுகளை பெற முடியும். அத்துடன், அனைத்து வானிலை தரவுகளை விண்வெளியில் இருந்து உடனுக்குடன் அனுப்பும் திறன்களை கொண்டது. பொதுவாக ஸ்ரீஹரி கோட்டாவில் இருந்து ராக்கெட் ஏவப்படுவதை துறை சார்ந்த மத்திய மந்திரி, இஸ்ரோ விஞ்ஞானிகள் மற்றும் அதிகாரிகள், செயற்கைக்கோள் தொடர்புடையவர்களே பார்ப்பது வழக்கம். ஆனால், இந்த பூமி இமேஜிங் செயற்கைக்கோள் விண்ணில் ஏவப்படுவதை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான நாடாளுமன்ற நிலைக்குழுவில் அங்கம் வகிக்கும் எம்.பி.க்கள் குழுவினர் பார்வையிடுகின்றனர்.

இஸ்ரோவின் போர் குதிரை ராக்கெட் பி.எஸ். எல்.வி. சி61 ராக்கெட் மூலம் இ.ஓ.எஸ்.09 செயற்கைக்கோள் விண்ணில் ஏவப்படுவதை பார்வையிடுவதுடன், அதுதொடர்பான கருத்துகளையும் தெரிந்து கொள்ள உள்ளனர் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறினர்.

# மதபோதகர் ஜான் ஜெபராஜுக்கு நிபந்தனை ஜாமீன் சென்னை ஐகோர்ட்டு உத்தரவு




சென்னை மே.16
கோவையை சேர்ந்தவர் பிரபல மதபோதகர் ஜான் ஜெபராஜ். இவர், கோவையில் 'கிங் ஜெனரேஷன்' கிறிஸ்தவ பிரார்த்தனை கூடத்தை நிறுவி மதபோதகராக உள்ளார். கடந்த 2024ம் ஆண்டு மே 21ந்தேதி தன் வீட்டில் நடந்த விருந்தின்போது, 2 சிறுமிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக ஜான் ஜெபராஜ் மீது காந்திபுரம் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது.

அதன் அடிப்படையில், போக்சோ வழக்குப்பதிவு செய்த போலீசார், கடந்த மாதம் கேரளாவில் தலைமறைவாகி இருந்த ஜான் ஜெபராஜை கைது செய்தனர். இந்த வழக்கில் ஜாமீன் கேட்டு சென்னை ஐகோர்ட்டில், அவர் மனு தாக்கல் செய்தார். அதில், "என் மனைவியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து வாழ்ந்து வருகிறேன். என் மனைவியின் குடும்பத்தினர் தூண்டுதலின்பேரில் இந்தபொய் புகார் கொடுக்கப்பட்டு உள்ளது. போலீஸ் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்க தயாராக உள்ளேன். அதனால், ஜாமீன் வழங்க வேண்டும்" என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில் இந்த மனுவை விசாரித்த நீதிபதி எம்.நிர்மல்குமார், ஜான் ஜெபராஜுக்கு நிபந்தனை ஜாமீன் வழங்கி உத்தரவிட்டுள்ளார். இரு நபர் ஜாமீன் உத்தரவாதம் அளிக்க வேண்டும். விசாரணைக்கு இடையூறு ஏற்படுத்த கூடாது. விசாரணை அதிகாரி முன்பு ஆஜராகி கையொப்பமிட வேண்டும் என்று நிபந்தனை விதித்து உத்தரவிட்டுள்ளார்.

# பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் நீதிமன்றத்தின் தீர்ப்பு பெரும் ஆறுதல் சீமான்



சென்னை மே.16
நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாடே எதிர்நோக்கியிருந்த பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில், குற்றவாளிகள் 9 பேருக்கும் வாழ்நாள் சிறைத்தண்டனை வழங்கியிருக்கும் கோவை மகளிர் நீதிமன்றத்தின் தீர்ப்பு வரவேற்கத்தக்கது. இத்தீர்ப்பு பாதிக்கப்பட்ட பெண்களுக்கும், தமிழக மக்களுக்கும் கிடைத்திருக்கும் பெரும் ஆறுதலாகும். பல்வேறு அரசியல் நெருக்கடிகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கும், மிரட்டல்களுக்கும் மத்தியிலும், பிறழ் சாட்சியாக மாறாது நெஞ்சுரத்தோடும், துணிவோடும் நீதிமன்றத்தில் சாட்சியமளித்து நீதியின் பக்கம் நின்ற பெண்களின் செயல்பாடு போற்றத்தக்கது. நினைத்துப் பார்க்கவே முடியாத பாலியல் கொடூரங்களை நிகழ்த்திய அக்கொடுங்கோலர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டிருப்பது மிகச் சரியான முடிவாகும்.

"அண்ணா.. அடிக்காதீங் கண்ணா.." எனப் பாலியல் குற்றவாளிகளிடம் சிக்குண்டுக் கதறிய தங்கையின் அழுகுரலும், விம்மலும் இன்னும் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. அவளின் அண்ணனாக இத்தீர்ப்பை முழுமனதோடு ஏற்கிறேன். சக உயிரான பெண்ணை காக்காமல் மண்ணைக் காக்க போராடி என்ன பயன்?

அ.தி.மு.க.வின் ஆட்சிக் காலத்தில் நடந்தேறிய இப்பாலியல் வன்கொடுமையில் அதிகாரவர்க்கமும், காவல்துறையும் குற்றவாளிகளைக் காப்பாற்றவும், பாதிக்கப்பட்டப் பெண்களை அச்சுறுத்தவுமே முனைந்தன. பலதரப்பட்டத் தரப்பிலுமிருந்தும் போராட்டங்கள் வெடித்து, அரசியல் நெருக்கடிகள் கொடுக்கப்பட்டப் பிறகே, வழக்கை மத்திய புலனாய்வுப் பிரிவுக்கு மாற்றியது அன்றைய அ.தி.மு.க. அரசு. அன்றைக்குக் குற்றவாளிகளைக் காப்பாற்ற துணைநின்ற அ.தி.மு.க., இன்றைக்கு தங்களால் தான் நீதி கிடைத்தது எனச் சொந்தம் கொண்டாடி, இதிலும் அரசியல் செய்ய முனைவது மிக இழிவானதாகும். அதனைப்போலவே, அண்ணா பல்கலைக்கழக வளாகத்திற்குள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட மாணவி விவகாரத்தில், 'யார் அந்த சார்?' எனும் ஒட்டுமொத்த தமிழக மக்களின் கேள்வியைப் புறந்தள்ளி, பின்புலத்திலிருக்கும் அதிகாரப் புள்ளிகளைக் காப்பாற்றிய தி.மு.க. அரசுக்கும் இதனைப் பேச எந்தத் தார்மீகமும் இல்லை. இவ்விவகாரத்திலும் தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் அறிக்கைப்போர் தொடுத்து, ஒருவரையொருவர் மாறி மாறிக் குற்றஞ்சாட்டிக் கொண்டு அரசியல் லாப மீட்ட முற்படுவது வெட்கக் கேடானதாகும்.

இவ்வழக்கில் கிடைக்கப் பெற்றிருக்கும் நீதியானது, நியாயத்திற்காகப் போராடிய பொதுமக்களுக்கும், பாதிக்கப்பட்டு அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டபோதும் துணிந்து நீதிமன்றத்தின் படியேறிய பெண்களுக்கும் கிடைத்திருக்கும் வெற்றியாகும். இத்தீர்ப்பின்மூலம் பாலியல் குற்றவாளிகள் அனுபவிக்கப்போகும் சிறைத்தண்டனை, பெண்களைப் போகப் பொருளாக எண்ணி, அத்துமீற நினைக்கும் அத்தனைப் பேருக்குமான பாடமாகவும், எச்சரிக்கையாகவும் அமைய வேண்டும்.

ஆகவே, மரணம்வரை சிறைத் தண்டனை எனக் கிடைத்திருக்கும் இத்தீர்ப்பு மேல்முறையீடுகளில் நீர்த்துப் போகாமலிருக்க வலுவான சட்டப்போராட்டங்களை நடத்த வேண்டுமெனவும், பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளைத் தடுக்கவும், அவர்களுக்கானப்பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் தமிழ்நாடு அரசை நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# 2 குழந்தைகளை கொன்று தம்பதி தற்கொலை... கடன் பிரச்சினையால் விபரீதம்

திருச்சி, மே.16
திருச்சி மாவட்டம் மேலகல்கண்டார் கோட்டை பகுதியில் வசித்து வந்தவர் ஜவுளிக்கடை உரிமையாளரான அலெக்ஸ். அவரது மனைவி விக்டோரியா. இவர்களுக்கு 9 மற்றும் 3 வயதில் இரு மகள்கள் இருந்துள்ளனர். இந்த நிலையில், இவர்கள் வசித்து வந்த வீடு இன்று காலை நீண்ட நேரமாக திறக்கப்படாமல் கிடந்தது. இதனால் சந்தேகம் அடைந்த அக்கம் பக்கத்தினர் போலீசுக்கு தகவல் கொடுத்தனர். போலீசார் விரைந்து வந்து கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தனர்.

அப்போது வீட்டிற்குள் ஒரு அறையில் தம்பதியினர் இறந்த நிலையில் கிடந்தனர். மற்றொரு அறையில் இரு மகள்களும் இறந்து கிடந்தனர்.

அதைப்பார்த்து அதிர்ச்சி அடைந்த போலீசார் 4 பேரின் சடலங்களை மீட்டு திருச்சி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

விசாரணையில், போதிய வருமானம் இல்லாமல் அதிக கடன் ஏற்பட்டதாக தெரிகிறது. இதனால் கடன் பிரச்சினையில் இருந்து மீள முடியாமல் தவித்து வந்த தம்பதி ஒருகட்டத்தில் தற்கொலை செய்ய முடிவு செய்துள்ளனர். நாம் இருவரும் இறந்துவிட்டால் குழந்தைகள் அனாதையாகிவிடும் என்று எண்ணிய கணவன்மனைவி அவர்களையும் தங்களுடன் அழைத்து செல்ல முடிவெடுத்தனர்.

அதன்படி, முதலில் தங்களது இரு மகள்களையும் கொலை செய்து பின்னர் தம்பதியினர் தூக்குப்போட்டு தற்கொலை செய்துகொண்டது தெரியவந்துள்ளது. தொடர்ந்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில்பெரும்பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# கோவை:நாட்டுத் துப்பாக்கி வைத்திருந்த ரவுடியை சுட்டுப்பிடித்த போலீஸ்



கோவை, மே.16
கோவை மாவட்டம் கோவில்பாளையத்தை சேர்ந்தவர் ரவுடி ஹரிஸ்ரீ. இவருக்கு சக்திவேல் என்பவருடன் தகராறு ஏற்பட்டது. இதனால் ஆத்திரம் அடைந்த ஹரிஸ்ரீ சட்டவிரோதமாக தன்னிடம் வைத்திருந்த நாட்டுத் துப்பாக்கியை எடுத்து வந்து மேலே சுட்டு மிரட்டியுள்ளார்.

இதனையடுத்து சக்திவேல் காவல் நிலையத்தில் இது குறித்து புகார் அளித்தார். புகாரின் பேரில் ஹரிஸ்ரீயிடம் போலீசார் விசாரணை செய்ய சென்றனர். அப்போது அங்கிருந்து தப்பிக்க தனது துப்பாக்கியால் போலீசாரை சுட முயன்றதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் தற்காப்புக்காக போலீசார் ஹரிஸ்ரீ மீது துப்பாக்கி சூடு நடத்தினர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. போலீசார் சுட்டுப் பிடிக்க முயன்றதில் காயமடைந்த ரவுடி ஹரிஸ்ரீ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சூலூர் அடுத்த அரசூர் பகுதியில் நடந்த துப்பாக்கிச் சூடு குறித்து எஸ்பி கார்த்திகேயன் விசாரணை நடத்தி வருகிறார்.

# மகன் உயிரிழந்த செய்தியை அறிந்த அதிர்ச்சியில் சுருண்டு விழுந்து உயிரிழந்த தாய்



திருவண்ணாமலை, மே.16
திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி அருகே வண்ணாங்குளம் கிராமத்தை சேர்ந்தவர் முன்னாள் ராணுவ வீரர் வாசுதேவன். இவரது மனைவி பேபி சரோஜா. தம்பதியினருக்கு ராஜன், ராஜேந்திரன் என்ற 2 மகனும், 1 மகளும் உள்ளனர். இதில் ராஜன், ராஜேந்திரன் ஆகியோர் ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது சென்னையில் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகின்றனர்.

இந்நிலையில், ராஜேந்திரன் சென்னையில் தான் வேலை செய்யும் தனியார் கம்பெனியில் பணியை முடித்து விட்டு வேலூரிலிருந்து தனது சொந்த கிராமமான வண்ணாங்குளத்திற்கு பைக்கில் வந்து கொண்டிருந்தார். அப்போது எதிரே வந்த அடையாளம் தெரியாத வாகனம் அவர் மீது மோதியது. இந்த விபத்தில் சிக்கி அவர் படுகாயமடைந்தார். இதனை கண்ட அங்கிருந்தவர்கள் ராஜேந்திரனை மீட்டு வேலூர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.

இந்த நிலையில் மருத்துவனையில் முன்னாள் ராணுவ வீரர் ராஜேந்திரன் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார். இந்த தகவலைக் கேட்டவுடன் அவரது தாயார் பேபி சரோஜா (80) மயங்கி விழுந்து உயிரிழந்தார். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# ஈரோடு: எக்ஸ்பிரஸ் ரெயிலில் 14 கிலோ கஞ்சா பறிமுதல்

ஈரோடு, மே.16
அசாமின் திப்ருகார் , தமிழ்நாட்டின் கன்னியாகுமரி இடையே விவேக் எக்ஸ்பிரஸ் ரெயில் இயக்கப்படுகிறது. இந்த எக்ஸ்பிரஸ் ரெயிலில் கஞ்சா கடத்தி வரப்படுவதாக ஈரோடு மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவு போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இந்த தகவலின் அடிப்படையில் அசாமில் கன்னியாகுமரி சென்ற விவேக் எக்ஸ்பிரஸ் ரெயில் ஈரோடு ஜங்ஷன் வந்த போது அதில் போலீசார் அதிரடி சோதனை நடத்தினர். சோதனையில் ரெயிலின் முன்பதிவு செய்யப்படாத பெட்டியில் கழிவறை அருகே சில பைகளில் 14 கிலோ கஞ்சா இருந்ததை போலீசார் கண்டுபிடித்தனர். இதையடுத்து கஞ்சாவை பறிமுதல் செய்த போலீசார், இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கோயில் கட்ட எதிர்ப்பு; பிரபல யூடியூபர் வீடு முற்றுகை

உடன்குடி, மே.16

தூத்துக்குடி மாவட்டம் உடன்குடி பெருமாள்புரம் வெங்கடாசலபுரம் தெருவில் விஸ்வகர்மா சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட உச்சினிமாகாளி அம்மன், பட்டரை அம்மன் கோயில் உள்ளது. இக்கோயில் அண்மையில் புதுப்பித்துக் கட்டுவதற்காக இடித்து அகற்றப்பட்டு அதே இடத்தில் புதிய கோயில் கட்டுவதற்கு திருப்பணி வேலைகள் நடந்து வருகிறது.



இந்த கோயில் கட்டிடம் தனது வீட்டிற்கும், தெருவிற்கும் இடையூறு ஏற்படுத்தும் வகையில் கட்டப்படுவதாக கூறி நடிகர் வடிவேல் பாணியில் அப்பகுதி கீழத்தெருவை காணவில்லை என்று பிரபல யூடியூபரும், நடிகருமானஜி.பி. முத்து கலெக்டர் மற்றும் அதிகாரிகளிடம் புகார்மனு அளித்திருந்தார். இதனால் கோயில் திருப்பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. இதையடுத்து பொய்யானகுற்றச்சாட்டை கூறி கோயில் கட்டுவதற்கு இடையூறு ஏற்படுத்துவதாக கூறி, ஜி.பி.முத்துவின் வீட்டை பெருமாள்புரம் ஊர்மக்கள்முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். தகவலறிந்த வந்த போலீசார் இரு தரப்பினர் சமதானப்படுத்தினர்.

# பஸ்சில் இருந்து விழுந்து குழந்தை பலி; டிரைவர், கண்டக்டர் அதிரடி சஸ்பெண்ட்




சேலம், மே.16

தர்மபுரி மாவட்டம், வேப்பிலை முத்தம்பட்டியை சேர்ந்தவர் ராஜதுரை (31). இவர் நேற்று முன்தினம் தனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் கோவைக்கு சென்று கொண்டிருந்தார். ராஜதுரைதனது 9 மாத குழந்தை நவநீஷை, தனது தோள் மீது வைத்துக்கொண்டு பயணம் செய்து கொண்டிருந்தார். அப்போது ராஜதுரை கண்டக்டரிடம் பஸ்சின் முன்பக்க கதவை அடைக்கும்படி கூறியுள்ளார். ஆனால் கதவை அடைக்காமல் இருந்துள்ளனர்.

இந்த பஸ் சேலம் மாவட்டம், சங்ககிரி அருகே வளையக்காரனூர் மேம்பாலத்தில் இரவு 10.15 மணிக்கு சென்று கொண்டிருந்தபோது, டிரைவர் திடீரென பிரேக் போட்டார். அப்போது ராஜதுரையின் தோளில் தூங்கி கொண்டிருந்த கைக்குழந்தை நவநீஷ், தூக்கி வீசப்பட்டு படிக்கட்டு வழியே கீழே விழுந்து உயிரிழந்தது.

இதுதொடர்பாக பஸ் டிரைவர் கோவை கவுண்டம்பாளையத்தை சேர்ந்த சிவன்மணி (48), கண்டக்டர் பழனிசாமி(50) ஆகிய 2 பேர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்நிலையில், டிரைவர் சிவன்மணி, கண்டக்டர் பழனிசாமி ஆகியோர் அதிரடியாக சஸ்பெண்ட் செய்யப்பட்டனர்.

# தருமபுரி: 5 மாத கர்ப்பிணி மர்ம சாவு போலீசார் விசாரணை

தருமபுரி, மே.16

தருமபுரி மாவட்டம் ஏரியூர் அருகே உள்ள மஞ்சளை ஊராட்சிக்கு உட்பட்ட ஏர்கோல்பட்டியைச் சேர்ந்தவர் ஏழுமலை. கூலித்தொழிலாளி. இவரது மனைவி தனலட்சுமி (23 வயது). இவர்களுக்கு கடந்த 6 மாதத்திற்கு முன்பு திருமணம் நடைபெற்றது. தனலட்சுமி 5 மாத கர்ப்பமாக இருந்தார்.

இதனிடையே நேற்று முன்தினம் தனலட்சுமிக்கு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதனால் குடும்பத்தினர் அவரை மீட்டு பெரும்பாலை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக மேச்சேரியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு மருத்துவர்கள் பரிசோதித்த போது தனலட்சுமி ஏற்கனவே இறந்து விட்டது தெரியவந்தது.




இதுகுறித்து ஏரியூர் போலீசாருக்குதகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து போலீசார் விரைந்து சென்று தனலட்சுமியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து போலீசார் விசாரணை நடத்தினர்.

அப்போது தனலட்சுமிக்கு ஏற்கனவே திருமணம் ஆகி, கணவரை பிரிந்து வாழ்ந்து வந்ததும், கடந்த 6 மாதங்களுக்கு முன்பு ஏழுமலையை 2வது திருமணம் செய்ததும் தெரியவந்தது.

தொடர்ந்து போலீசார் மர்ம சாவு என வழக்குப்பதிவு செய்து விசாரணைநடத்திவருகின்றனர். 5 மாத கர்ப்பிணி மர்மமான முறையில் இறந்த சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியது.

# நெல்லை: 3 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை வாலிபர் போக்சோவில் கைது




திருநெல்வேலி மே.16

நெல்லை மாவட்டம் திசையன்விளை அருகே ஆனைகுடியைச் சேர்ந்தவர் முனியசாமி. இவருடைய மகன் முத்துராஜா (29 வயது). இவர் பக்கத்து ஊரான இடையன்குடி பகுதியில் வசித்து வருகிறார். இவர் அப்பகுதியில் உள்ள தனியார் நிறுவனத்தில் ஊழியராக வேலை செய்து வருகிறார்.

சம்பவத்தன்று முத்துராஜா, தெருவில் விளையாடிக் கொண்டிருந்த 3 வயது சிறுமிக்கு மிட்டாய் வாங்கி கொடுத்து தனியாக அழைத்து சென்று பாலியல் தொல்லை கொடுத்ததாக கூறப்படுகிறது. இதனை அறிந்த சிறுமியின் பெற்றோர் அதிர்ச்சி அடைந்து, வள்ளியூர் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். அதன்பேரில், போலீசார் போக்சோ சட்டத்தில் வழக்குப்பதிவு செய்து முத்துராஜாவை கைது செய்தனர்.


# நெல்லை: 3 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை வாலிபர் போக்சோவில் கைது

திருநெல்வேலி, மே.16

நெல்லை மாவட்டம் திசையன்விளை அருகே ஆனைகுடியைச் சேர்ந்தவர் முனியசாமி. இவருடைய மகன் முத்துராஜா (29 வயது). இவர் பக்கத்து ஊரான இடையன்குடி பகுதியில் வசித்து வருகிறார். இவர் அப்பகுதியில் உள்ள தனியார் நிறுவனத்தில் ஊழியராக வேலை செய்து வருகிறார்.

சம்பவத்தன்று முத்துராஜா, தெருவில் விளையாடிக் கொண்டிருந்த 3 வயது சிறுமிக்கு மிட்டாய் வாங்கி கொடுத்து தனியாக அழைத்து சென்று பாலியல் தொல்லை கொடுத்ததாக கூறப்படுகிறது. இதனை அறிந்த சிறுமியின் பெற்றோர் அதிர்ச்சி அடைந்து, வள்ளியூர் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். அதன் பேரில், போலீசார் போக்சோ சட்டத்தில் வழக்குப்பதிவு செய்து முத்துராஜாவை கைது செய்தனர்.


# சுபமுகூர்த்தம், வார இறுதி நாட்களை ஒட்டி தமிழகம் முழுவதும் 1,739 சிறப்பு பஸ்கள் இயக்கம்

சென்னை, மே.16

அரசு விரைவு போக்குவரத்துக்கழக மேலாண் இயக்குனர் மோகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

சுபமுகூர்த்தம் மற்றும் வார இறுதி நாட்களையொட்டி சென்னை கிளாம்பாக்கத்தில் இருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர்,, சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 16ந் தேதி (வெள்ளிக்கிழமை) 570 பஸ்களும், 17ந் தேதி (சனிக்கிழமை) 605 பஸ்களும் இயக்க திட்ட மிடப்பட்டுள்ளது.




சென்னை கோயம்பேட்டில் இருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 16ந் தேதி வெள்ளிக்கிழமை 100 பஸ்களும், 17ந் தேதி சனிக்கிழமை 90 பஸ்களும் மேற்கூறிய இடங்களில் இருந்தும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், பெங்களூரு, திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இருந்தும் பல்வேறு இடங்களுக்கும் 250 சிறப்பு பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மாதவரத்தில் இருந்து 16ந் தேதி 24 பஸ்களும், 17ந் தேதி 100 பஸ்களும் சிறப்பு பஸ்களாக இயக்கப்படுகிறது.

மேலும், ஞாயிறு அன்று சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களில் இருந்தும் சிறப்பு பஸ்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# குடியாத்தம் கெங்கையம்மன் கோவில் தேரோட்டம்

குடியாத்தம், மே.16

வேலூர் மாவட்டம் குடியாத்தம் கெங்கையம்மன் கோவில் திருவிழா விமரிசையாக நடைபெற்று வருகிறது. விழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் இன்று நடைபெற்றது. தேரோட்டத்தை முன்னிட்டு காலையில் மூலவருக்கு சிறப்பு அபிஷேகமும் அலங்காரமும் நடைபெற்றது. தொடர்ந்து உற்சவருக்கு சிறப்பு அலங்காரமும், ஆராதனையும் செய்யப்பட்டது. பின்னர் உற்சவர் தேரில் எழுந்தருள, தேரோட்டம் தொடங்கியது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் வடம் பிடித்து தேர் இழுத்தனர்.

நேர்த்திக்கடன் செலுத்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் மாவிளக்கு தீபம் ஏந்தி வந்தனர். சிலர் தேர்ச்சக்கரத்தில் உப்பு, மிளகு கொட்டி நேர்த்திக்கடன் செலுத்தினர். சில பெற்றோர்கள்தங்கள் குழந்தைகளை தேரில் அம்மன் காலடியில் வைத்து வழிபட்டனர்.

நகரின் முக்கிய வீதிகள் வழியாக வந்த தேர், மாலையில் தரணம்பேட்டை பிள்ளையார் கோவில் அருகே வந்தடைந்தது. பின்னர் அங்கிருந்து புறப்பட்டு இரவு மீண்டும் நிலையை அடைகிறது.

விழாவின் சிகர நிகழ்வான சிரசு திருவிழா நாளை விமரிசையாக நடைபெறுகிறது. தேரோட்டம் மற்றும் சிரசு திருவிழாவை முன்னிட்டு நகரமே விழாக்கோலம் பூண்டுள்ளது. தண்ணீர் பந்தல், அன்னதானம் உள்ளிட்டவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

# திடீர் விபத்து; ஈரோடு மாநகராட்சி குப்பைக்கிடங்கில் பயங்கர தீ: இயந்திரங்கள், மேற்கூரைகள் சேதம்

ஈரோடு, மே.16

ஈரோடு மாநகராட்சி குப்பை கிடங்கில் குவிக்கப்பட்டிருந்த மக்காத குப்பையில் இன்று ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் இயந்திரங்கள், மேற்கூரை எரிந்து சேதமானது. ஈரோடு மாநகராட்சியில் தினசரி 180 டன் முதல் 200 டன் வரை குப்பை சேகரிக்கப்படுகிறது. இதில், 70 டன் முதல் 80 டன் வரை மக்காத குப்பை வைரபாளையத்தில் உள்ள கிடங்கில் சேகரிக்கப்படுகிறது. மக்கும் குப்பையை நுண்ணுயிர் கிடங்குகளில் இயற்கை உரம் தயாரித்து, விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது.



மக்காத குப்பை வைரபாளையத்தில் உள்ள கிடங்கில், அதிக வெப்பநிலையில் எரியூட்டப்பட்டு வெளியேறும் சாம்பலில் இருந்து கற்கள் மற்றும் சிமெண்ட் தயாரிக்கும்ஆலைகளுக்கு அனுப்புவதற்காக குவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், வைராபாளையம் கிடங்கில் மக்காத குப்பையில் இன்று காலையில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது.


தொடர்ந்து அங்கு குவித்து வைக்கப்பட்டிருந்த குப்பைக்கும் தீ பரவியதால், இயந்திரங்கள் மற்றும் மேற்கூரைகள் சேதமடைந்தது. உடனடியாகபணியாளர்கள்அளித்த தகவலின்பேரில் சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்பு துறையினர், ஜேசிபி இயந்திரங்கள் உதவியுடன் குப்பையை அகற்றி தீயை போராடி அணைத்தனர். இதுகுறித்து மாநகராட்சி அதிகாரிகள் கூறியதாவது: வைராபாளையம் குப்பைக் கிடங்கில் இருந்து மக்காத குப்பையை எரித்து அதிலிருந்து வெளியேறும் சாம்பல், சிமெண்ட் மற்றும் கற்கள் தயாரிக்கும் ஆலைகளுக்கு அனுப்பப்படுகிறது. இந்நிலையில் அதிக வெப்பநிலை காரணமாக இக்கிடங்கில் இன்று திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் ரூபாய் ஒன்றரை லட்சம் மதிப்பிலான எரியூட்டப்படும் இயந்திரத்தின் பெல்ட் சேதமானது. கூரையும் சேதமானது.

இவ்வாறு மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

# கோவை: கோவில்பாளையம் அருகே நாட்டுத் துப்பாக்கி வைத்திருந்த ரவுடியை சுட்டுப் பிடித்தது போலீஸ்

கோவை, மே.16

கோவில்பாளையம் அருகே நாட்டுத் துப்பாக்கி வைத்திருந்த ரவுடியை போலீஸ் சுட்டுப் பிடித்தது. மிரட்டல் புகாரில் கைதான ரவுடி ஹரிஸ்ரீயின் துப்பாக்கியை பறிமுதல் செய்ய போலீஸ் அழைத்துச் சென்றது. சக்திவேல் என்பவருடன் ஏற்பட்ட தகராறில்தனதுதுப்பாக்கியால் வானில் சுட்டு மிரட்டியுள்ளார் ஹரிஸ்ரீ. துப்பாக்கியை பறிமுதல் செய்ய போலீஸ் அழைத்துச் சென்றபோது ரவுடி ஹரிஸ்ரீ தப்பிக்க முயன்றுள்ளார்.




தப்பியோட முயன்ற ரவுடி ஹரிஸ்ரீயின் இடதுகாலின் கீழ் சுட்டுப் பிடித்தது கோவை மாவட்ட போலீஸ். போலீசார் சுட்டுப் பிடிக்க முயன்றதில் காயமடைந்த ரவுடி ஹரிஸ்ரீ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சூலூர் அடுத்த அரசூர் பகுதியில் நடந்த துப்பாக்கிச் சூடு குறித்து எஸ்பி கார்த்திகேயன் விசாரணை நடத்தி வருகிறார்.

# சிறுமலை மலைச்சாலையில் மாயமாகும் குவி கண்ணாடிகள்: வாகன ஓட்டிகள் விபத்தில் சிக்கும் அபாயம்

திண்டுக்கல், மே.16

சிறுமலை மலைச்சாலை வளைவுகளில் அமைக்கப்பட்டுள்ள குவி கண்ணாடிகள் திருடு போவதால், வாகன ஓட்டிகள் விபத்தில் சிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானலுக்கு அடுத்தபடியாக முக்கிய சுற்றுலாத் தலமாக சிறுமலை திகழ்கிறது. கடல் மட்டத்திலிருந்து 1,600 மீ உயரத்தில் உள்ள இப்பகுதி, சுமார் 60 ஆயிரம் ஏக்கர் பரப்பளவைக் கொண்டுள்ளது. இது திண்டுக்கல்லிலிருந்து 25 கிமீ தொலைவில் உள்ளது. கோடை விடுமுறை மற்றும் வார விடுமுறை நாட்களில் திண்டுக்கல் மற்றும் பிற மாவட்டங்களில் இருந்து ஏராளமான சுற்றுலாப்பயணிகள் இங்கு இயற்கை அழகை கண்டு களிக்க வருகின்றனர்.




இந்த மலைச்சாலையில் அபாயகரமான 18 கொண்டை ஊசி வளைவுகள் உள்ளன. இந்த வளைவுகளில் விபத்துக்களை தவிர்ப்பதற்காக குவி கண்ணாடிகள் அமைக்கப்பட்டன. இந்நிலையில் 4க்கும் மேற்பட்ட வளைவுகளில் இருந்த குவி கண்ணாடிகளை சமூக விரோதிகள் திருடிச் சென்றுள்ளனர். இதனால் வளைவுகளில் செல்லும் வாகனங்கள் விபத்துக்குள்ளாகும் நிலை உள்ளது. குறிப்பாக இரவு நேரங்களில் செல்லும் வாகனங்கள் விபத்துக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் 6வது கொண்டை ஊசி வளைவில் சாலையோரத் தடுப்புச்சுவர் மிகவும் தாழ்வாக உள்ளது. இதனால் அந்த வழியாக செல்லும் வாகனங்கள் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகி வருகின்றன.

கடந்த மாதம் இப்பகுதியில் சுற்றுலா வேன் ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. எனவே இப்பகுதியில் சாலையோர தடுப்புச்சுவரை உயர்த்த கோரிக்கை எழுந்துள்ளது. இது குறித்து அப்பகுதிமக்கள் கூறுகையில், ‘‘குவி கண்ணாடிகளை திருடியவர்களை கைது செய்ய வேண்டும். அப்பகுதிகளில் மீண்டும் குவி கண்ணாடிகளை பொருத்துவதற்கு நெடுஞ்சாலைத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆறாவது கொண்டை ஊசி வளைவில் விபத்தை தவிர்க்கும் வகையில் தாழ்வாக உள்ள சாலையோர தடுப்புச்சுவரை உயர்த்த வேண்டும்’’ என்றனர்.

# திருச்சி கோட்டை ரயில் நிலையம் அருகே 159 ஆண்டு பழமையான மேம்பாலம் இடிப்பு: ரூ.34 கோடியில் புதிதாக கட்டப்படுகிறது

திருச்சி, மே.16

திருச்சியில் 159 ஆண்டு பழமையான ரயில்வே மேம்பாலம் இடித்து அகற்றப்பட்டுள்ளது. ரூ.34 கோடியில் புதிதாக பாலம் கட்டப்படஉள்ளது. திருச்சி சாலை ரோட்டில் ரயில்வே மேம்பாலம் அமைந்துள்ளது. இந்த பாலம் 1866ம் ஆண்டு சுண்ணாம்பு மற்றும் செங்கல் கட்டிடத்திலான வளைவு வடிவ மூலம் இருபக்க நடைபாதையுடன் 9 மீட்டர் அகலத்தில் ரயில்வே துறையால் கட்டப்பட்டது. 159 ஆண்டு பழமையான இந்த பாலம் தற்போது கனரக வாகன போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் இல்லாததாலும், பழுதடைந்ததாலும் பாலத்தை இடித்து விட்டு தற்போதைய போக்குவரத்துக்கு ஏற்றாற்போல் அகலமாகவும், சற்று உயரமாகவும் பாலத்தை கட்ட மாநகராட்சி நிர்வாகம் திட்டமிட்டது.



இதைத்தொடர்ந்து நகர் ஊரமைப்பு துறையின் உள்கட்டமைப்பு மற்றும் வசதி நிதியின் கீழ், ரயில்வே நிர்வாகத்துடன் இணைந்து இந்த பாலத்தை 31.39 மீட்டர் நீளம், 20.70 மீட்டர் அகலத்தில் இருவழிப்பாதையாக கட்ட ரூ.34.10 கோடி நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டது. பாலத்தின் கிழக்கு பகுதியில் 223.75 மீட்டர் நீளமும், 15.61. மீட்டர் அகலம் உடையதாகவும், மேற்கு பகுதியில் 225 மீட்டர் நீளமும், 15.61 மீட்டர் அகலமுடையதாக சாலையில் தடுப்பு சுவர்களுடன் விரிவாக்கம் செய்யும் பணி தொடங்கி நடைபெற்று வந்தது. பாலத்தின் இருபகுதியிலும் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளது.

இப்பாலம் இருவழி பாதையாக கட்டப்படுவதால் மெயின்கார்டுகேட் பகுதியில் இருந்து தில்லைநகர், தென்னூர், புத்தூர் மற்றும் உறையூர் பகுதிகளுக்கு போக்குவரத்து இடையூறின்றி எளிதாக சென்று வரலாம். பாலப்பணிகளால் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டு கரூர் பைபாஸ், பாலக்கரை வழியாக வாகனங்கள் சென்று வருகிறது.

இந்தநிலையில், ரயில்வே நிர்வாக எல்லையில் தண்டவாளத்தின் மேல் புதிதாக பாலம் கட்டுவதற்காக ஏற்கனவே இருந்த 159 ஆண்டு பழமையான மேம்பாலம் நேற்று 10 ராட்சத பொக்லைன் மூலம் முற்றிலும் இடித்து அகற்றப்பட்டது.

இதையொட்டி அந்த வழியாக கரூர் செல்லும் மற்றும் கரூரில் இருந்து வரும் ரயில்களின் சேவை ரத்து செய்யப்பட்டன. மேலும் பாலத்தை இடித்து அகற்றும் போது தண்டவாளம் சேதம் அடையாமல் இருக்க மணல் மூட்டைகளை அடுக்கி பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டு இருந்தன. இன்று தண்டவாளத்தில் மணல் மூட்டைகள் அகற்றப்பட்டு ரயில் போக்குவரத்து துவங்கியது.

# போதையில் அரசு பஸ் ஓட்டிய டிரைவர் மட்டை

பொள்ளாச்சி, மே.16

பொள்ளாச்சி மத்திய பஸ் நிலையத்தில் இருந்து சிவகாசி நோக்கி அரசு பஸ் நேற்று புறப்பட்டது. பஸ்ஸை டிரைவர் அருள் மூர்த்தி போதையில் ஓட்டியதாக கூறப்படுகிறது. அந்த பஸ்ஸில் சுமார் 30க்கும் மேற்பட்ட பயணிகள் இருந்தனர். உடுமலை ரோடு கோமங்கலம் புதூர் வழியாக தேசிய நெடுஞ்சாலையில் பஸ் சென்று கொண்டிருக்கும்போது, டிரைவர்அருள்மூர்த்தி மது போதையில் இருக்கையிலேயே தள்ளாடினார்.



மேலும், பஸ்சை இயக்கியபடியே புகையிலைப் பொருளை கையில் எடுத்து அதனை நசுக்கியபடி வாயில் வைத்தார்.

அதன்பிறகு பஸ்சை சரியாக இயக்க முடியாமல் திணறியதால் பஸ் தாறுமாறாக செல்ல ஆரம்பித்தது. பஸ்சில் இருந்த பயணிகள் உயிர் பயத்தில் கூச்சலிட்டனர். உஷாரான டிரைவர் அருள் மூர்த்தி பஸ்சை பஸ் நிறுத்திவிட்டு டிரைவர் இருக்கையிலேயே சாய்ந்து படுத்தார். பஸ்சிலிருந்து பயணிகள் அனைவரும் கீழே இறங்கினர்.

இதுதொடர்பாக டிரைவர் அருள் மூர்த்தி மீது கோமங்கலம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

தின கனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

16.5.2025

# குப்பையை தரம்பிரிக்கும்போது கிடைத்த விலையுயர்ந்த 4 செல்போன்கள் உரிமையாளரிடம் ஒப்படைப்பு: தூய்மைப் பணியாளரின் நேர்மை



மாதவரம், மே.16

மக்கும் குப்பை, மக்காத குப்பை தரம்பிரிக்கும் போது கிடைத்த புத்தம்புதிய 4 விலையுயர்ந்த செல்போன்களை ஒப்படைத்த தூய்மைப் பணியாளருக்கு பாராட்டு குவிந்தது. சென்னை மாதவரம் மண்டல பகுதிகளில் உள்ள குடியிருப்புகளில் இருந்து குப்பைகளை சேகரித்து அவற்றை மக்கும் மற்றும் மக்காத குப்பையாக தரம் பிரிக்கும் பணியில் சென்னை மாநகராட்சி என்விரோ தூய்மை பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். நேற்று மாதவரம்செங்குன்றம் சாலையில் இருந்து சேகரிக்கப்பட்ட குப்பைகள் அனைத்தையும் கிடங்கிற்கு கொண்டு வந்து அவற்றை மக்கும் மற்றும் மக்காத குப்பையாக தரம் பிரிக்கும் பணியில் மாநகராட்சி தூய்மை பணியாளர் தங்கவேலு ஈடுபட்டுள்ளார்.

அப்போது குப்பையில் புத்தம்புதிய பாக்ஸ்கூட திறக்கப்படாத மொபைல் போன்கள் பெட்டி இருந்தது. அந்த பெட்டியை திறந்து பார்த்தபோது 4 புதிய விலையுயர்ந்த செல்போன்கள் இருப்பது தெரியவந்தது. இதையடுத்து அந்த போன்களை உடனடியாக சென்னை என்விரோ தூய்மைபணிநிறுவனத்தின் மண்டல தலைவர் அருண் புகழேந்தி, திவாகர் ஆகியோரிடம் அந்த ஊழியர் ஒப்படைத்தார். அந்த புதிய மொபைல் போன் எங்கிருந்து கிடைக்கப் பெற்றது என்பது குறித்து விசாரணை நடத்தினர். இது, மாதவரத்தில் உள்ள ஒரு பிரபலமான நிறுவனத்தின் மொபைல் போன்கள் என்பதும் தவறுதலாக குப்பைத் தொட்டியில் விழுந்ததால் தூய்மை பணியாளர்கள் சேகரித்து கொண்டு வந்துள்ளனர் என்று தெரிந்தது.

அந்த ஒவ்வொரு போனில் விலை சுமார் ரூ.85 ஆயிரம் இருக்கும் என்று தெரிகிறது. அந்த 4 செல்போன்களையும் உரிமையாளரிடம் ஒப்படைத்தனர். இதனிடையே தூய்மை பணியாளர் தங்கவேலின் நேர்மையை மண்டல குழு தலைவர் நந்தகோபால், தூய்மை பணி நிறுவன என்விரோ அதிகாரிகள், மொபைல் போன்களை பெற்றுக்கொண்ட உரிமையாளர் ஆகியோர் வெகுவாக பாராட்டினர்.

# மானாமதுரை வைகை ஆற்றில் நிலாச்சோறு திருவிழா: கறிவிருந்து சாப்பிட்டு விடிய, விடிய பேசி மகிழ்ந்தனர்



மானாமதுரை, மே.16

மானாமதுரை வைகை ஆற்றில் நிலாச்சோறு திருவிழா நேற்றிரவு நடைபெற்றது. இதில் பொதுமக்கள் குடும்பம், குடும்பமாக கலந்துகொண்டு 'குளிர் நிலா' வெளிச்சத்தில் சைவ, அசைவ உணவுகளை சாப்பிட்டு விடிய, விடிய உரையாடி மகிழ்ந்தனர். சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் உள்ள ஆனந்தவல்லி சோமநாதர் – வீரஅழகர் கோயிலில் சித்திரை திருவிழா கடந்த 1ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழா நாட்களில் தினமும் சுவாமி – அம்பாள் திருவீதி உலா நடைபெற்றது. கடந்த 8ம் தேதி திருக்கல்யாணம், 9ம் தேதி தேரோட்டம் நடைபெற்றது. வைகை ஆற்றில் அழகர் இறங்கும் முக்கிய நிகழ்ச்சி 12ம் தேதி நடைபெற்றது.

இந்த விழாவை யொட்டி வைகை ஆற்றில் நிலாச்சோறு சாப்பிடும் பாரம்பரிய நிகழ்ச்சி நேற்றிரவு நடைபெற்றது. முன்னதாக, பொதுமக்கள் அதிகாலை முதலே ஆடு, கோழி, மீன் இறைச்சி கடைகளில் குவிந்தனர். அங்கிருந்து தங்களுக்கு வேண்டிய இறைச்சிகளை வாங்கி வந்து சுவையான உணவு வகைகளை சமைத்தனர். பின்னர், நிலாச்சோறு நிகழ்ச்சிக்காக நேற்றிரவு மானாமதுரை வைகை ஆற்றில் ஏராளமானோர் குவிந்தனர். அங்கு காட்சியளித்த வீரஅழகரை தரிசித்து விட்டு குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்களுடன் கூடிஅமர்ந்து நிலா வெளிச்சத்தில் சைவ, அசைவ உணவு வகைகளை ஒரு பிடி பிடித்தனர்.

இது குறித்து மானாமதுரையை சேர்ந்த சிவக்குமார் கூறியதாவது: ஆனந்த வல்லி சோமநாதர் கோயிலில் விழா நடைபெறும் நாட்களில் அசைவ உணவுகளை தவிர்த்துவிடுவோம். வீரஅழகர் ஆற்றில் இறங்கிய மறுநாள் (நேற்று) மானாமதுரை கிராமத்தார் மண்டபடியில் காட்சியளித்தார். பின்னர், மீண்டும் ஆற்றில்இறங்கிஇரவில் தங்கினார். இதையொட்டி நிலாச்சோறு விழா நடைபெறும். இதில் ஆற்று மணல் பரப்பில் சொந்த, பந்தங்களுடன் கூடிஅமர்ந்து சைவ, அசைவ உணவு, இனிப்பு பதார்த்தங்களை உண்டு மகிழ்வோம். விடிய, விடிய பேசி இரவுப் பொழுதை இனிதாக கழிப்போம். கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். இது மறக்க முடியாத நிகழ்வாகும்.

இவ்வாறு கூறினார்.

# திருமழிசை - திருவள்ளூர் நெடுஞ்சாலையில் கொடி கம்பம், கல்வெட்டு அகற்றம்



திருவள்ளூர், மே.16

திருவள்ளூர் பகுதியில் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள கொடி கம்பம், கல்வெட்டுக்கள் அகற்றப்பட்டு வருகிறது. பொது இடத்தில் உள்ள அரசியல்கட்சி கொடி கம்பங்களை அகற்றவேண்டும் என்று சென்னைஉயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள கொடி கம்பம், கல்வெட்டுக்கள் அகற்றப்பட்டு வருகிறது. இதன்படி, திருமழிசையில் இருந்து திருவள்ளூர் வரை செல்லும் சாலையில் பொது இடங்களில் கட்சி கொடி மற்றும் கம்பங்கள் கல்வெட்டுகளை நெடுஞ்சாலை துறை அதிகாரிகள்அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

கோட்ட பொறியாளர் டி.சிற்றரசு உத்தரவின்படி, உதவி கோட்ட பொறியாளர் மதியழகன் தலைமையில், உதவி பொறியாளர்கள் அரவிந்த், பிரசாந்த் ஆகியோர் திருமழிசையில் இருந்து திருவள்ளூர் செல்லும் சாலையோரத்தில் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள அரசியல் கட்சிக் கொடி கம்பம் மற்றும் கல்வெட்டுகள் ஆகியவற்றை அகற்றினர். ''இதுபோல் திருவள்ளூர் நகரத்தில் பொது இடங்களில் உள்ள அரசியல் கட்சி கொடி கம்பம், கல்வெட்டுகள் அகற்றப்படும்' என்று நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். இதையடுத்து பல இடங்களில் கொடி கம்பம் அகற்றப்பட்டு வருகிறது.

# பொதுமக்கள் குறை தீர் முகாமில் மனுக்களை பெற்று விரைந்து நடவடிக்கை எடுக்க காவல் அதிகாரிகளுக்கு உத்தரவு



சென்னை, மே.16

சென்னைகாவல் ஆணையாளர் ஆ.அருண், சென்னை பெருநகர காவல் ஆணையரகத்தில் நடைபெற்று வரும் பொதுமக்கள் குறை தீர் முகாமில், காவல் அதிகாரிகள் பொதுமக்களின் புகார் மனுக்களை பெற்று விரைந்து விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, சென்னை காவல் ஆணையாளர் ஆ.அருண், காவல் ஆணையரகத்தில் புகார் மனு கொடுக்க வந்த பொதுமக்களிடம் இருந்து 31 புகார் மனுக்களை பெற்று, விரைந்து விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். சென்னை காவல், துணை ஆணையாளர் (நலன் மற்றும் எஸ்டேட்) D.N.ஹரிகிரன் பிரசாத், உடன் இருந்தார்.

# கொடைக்கானல் அருகே காட்டெருமைக்கு உணவு வழங்கிய 2 பேருக்கு ரூ.10,000 அபராதம்



திண்டுக்கல் , மே.16

கொடைக்கானல் அருகே காட்டெருமைக்கு உணவு வழங்கிய 2 பேருக்கு வனத்துறை ரூ.10,000 அபராதம் விதித்துள்ளது. அபராதம் விதித்த வனத்துறையினர் வனவிலங்குகளுக்கு உணவு வழங்க வேண்டாம் எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# காஞ்சி காமாட்சியம்மன் கோயிலில் செல்போனுக்குத் தடை



காஞ்சிபுரம், மே.16

காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கோவிலுக்குள் பக்தர்கள் செல்போன் கொண்டு செல்ல தடை விதிக்கப்படுவதாக கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது. காமாட்சி அம்மன் கோவில் வளாகத்தில் செல்போன்கள், உடைமைகள் வைக்கும் நவீன தானியங்கி லாக்கர் வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

# 'தக் லைப்' படத்தின் டிரெய்லர், இசை வெளியீட்டு விழா தேதி அறிவிப்பு




36 வருடங்களுக்குப் பிறகு கமல்ஹாசன் மணிரத்னம் கூட்டணியில் உருவாகியுள்ள படம் 'தக் லைப்'. இப்படத்தில் நடிகர் சிம்பு, திரிஷா, ஜோஜு ஜார்ஜ், ஐஸ்வர்யா லட்சுமி, கவுதம் கார்த்திக் மற்றும் பாலிவுட் நடிகர் அலி பசல் உள்ளிட்டோர் முக்கிய காதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்திருக்கும் இப்படத்தை ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல், மெட்ராஸ் டாக்கீஸ், ரெட் ஜெயன்ட் மூவிஸ் இணைந்து தயாரித்துள்ளது. இப்படம் வருகிற ஜூன் 5ம் தேதி திரைக்கு வருகிறது.

இந்த நிலையில் இப்படத்தின் டிரெய்லர் மற்றும் இசை வெளியீட்டு விழா தேதியை படக்குழு அறிவித்துள்ளது. அதன்படி, டிரெய்லர் வருகிற 17ந் தேதி மாலை 5 மணிக்கு வெளியாக உள்ளது. அதனை தொடர்ந்து வருகிற 24ந் தேதி சென்னை சாய்ராம் கல்லூரியில் இசை வெளியிட்டு விழா நடைபெறும் என்றும் இந்த விழாவில் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் லைவ் பர்பாமென்ஸ் செய்வார் எனவும் படக்குழுவின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐபிஎல் : டெல்லி அணியின் முக்கிய வீரர் விலகல்



பஹல்காம் தாக்குதலை அடுத்து இந்தியா பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் நிலவி வந்தது. இதன் காரணமாக இந்தியாவில் நடந்து வந்த 18வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் ஒருவார காலம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. தொடர்ந்து போர் பதற்றம் தணிந்ததை தொடர்ந்து அணிநிர்வாகிகள், ஒளிபரப்புதாரர்கள், பாதுகாப்பு முகமைகள் உள்ளிட்ட சம்பந்தப்பட்டவர்களுடன் ஆலோசனை நடத்திய இந்திய கிரிக்கெட் வாரியம் ஐ.பி.எல். போட்டி வருகிற 17ந்தேதி மீண்டும் தொடங்கும் என அறிவித்துள்ளது. 13 லீக் ஆட்டங்கள் மற்றும் இறுதிப்போட்டி உள்பட 4 பிளேஆப் சுற்று என மொத்தம் 17 ஆட்டங்கள் நடத்தப்படுகிறது. மாற்றப்பட்ட புதிய அட்டவணைப்படி இரண்டு நாளில் இரு ஆட்டங்கள் இடம் பெறுகிறது. மே 29ந்தேதி இறுதிப்போட்டிக்கான முதலாவது தகுதி சுற்றும், மே 30ந்தேதி வெளியேற்றுதல் சுற்றும், ஜூன் 1ந்தேதி இறுதிப்போட்டிக்கான 2வது தகுதி சுற்றும், ஜூன் 3ந்தேதி இறுதிப்போட்டியும் நடைபெறுகிறது.

இந்நிலையில் டெல்லி அணியின் இடம்பெற்றிருந்த ஜேக் ப்ரேசர் மெக்கர்க் ஆஸ்திரேலியாவுக்கு சென்றுவிட்டார். மீதமுள்ள ஐபிஎல் 2025 போட்டிகளில் இருந்து விலகியுள்ளார். இதனையடுத்து அவருக்கு பதிலாக வங்காளதேச அணியின் வேகப்பந்து வீச்சாளர் முஸ்தபிசுர் ரஹ்மான் டெல்லி அணியில் இடம் பிடித்துள்ளார்.

# 'வேம்பு' படத்தின் டிரெய்லர் வெளியானது





இயக்குநர் வி. ஜஸ்டின் பிரபு இயக்கத்தில் உருவாகியுள்ள 'வேம்பு'. இதில் 'மெட்ராஸ்' படத்தின் மூலம் அறிமுகமாகி தமிழ் திரையுலகில் அறிமுகமான ஹரி கிருஷ்ணன் கதாநாயகனாக நடித்துள்ளார். கதாநாயகியாக ஷீலா நடித்துள்ளார்.

ஏ.குமரன் ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்த திரைப்படத்திற்கு மணிகண்டன் முரளி இசையமைத்திருக்கிறார். எளிய மனிதர்களின் வாழ்வியலை மையப்படுத்தி தயாராகி இருக்கும் இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் சமீபத்தில் வெளியானது. இப்படம் அகமதாபாத் சர்வதேச திரைப்பட விழாவில் கலந்துகொண்டு பல விருதுகளை வென்றுள்ளது.

இப்படம் வருகிற 23ந் தேதி வெளியாக உள்ளது. இந்த நிலையில் இப்படத்தின் டிரெய்லர் வெளியாகி உள்ளது. இந்த டிரெய்லரை பிரபல இயக்குனர் மாரிசெல்வராஜ் வெளியிட்டுள்ளார்.

# தாய்லாந்து ஓபன் பேட்மிண்டன்: லக்சயா சென் அதிர்ச்சி தோல்வி



தாய்லாந்து ஓபன் பேட்மிண்டன் தொடர் தாய்லாந்தில் நடந்து வருகிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்றில் இந்தியாவின் லக்சயா சென், அயர்லாந்தின் நாட் நூயென் உடன் மோதினார்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் இந்தியாவின் லக்சயா சென் 1921, 219, 1721 என்ற செட் கணக்கில் தோல்வி அடைந்தார். .மற்றொரு போட்டியில் இந்திய வீரர் பிரியான்ஷு ரஜாவத், இந்தோனேசிய வீரரிடம் தோல்வி அடைந்தார்.

# கவின் நடித்துள்ள 'கிஸ்' படத்தின் ரிலீஸ் அப்டேட்



நடிகர் கவின் 'நட்புன்னா என்னானு தெரியுமா' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் ஹீரோவாக அறிமுகமானார். அதைத்தொடர்ந்து வெளியான 'லிப்ட்', 'டாடா' திரைப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. கடைசியாக கவின் நடித்திருந்த 'பிளடி பெக்கர்' திரைப்படம் கலவையான வரவேற்பையே பெற்றது.

தற்போது கவின் 'கிஸ்' என்ற படத்தில் நடித்துள்ளார் பிரபல நடன இயக்குனரான சதீஷ் இயக்கும் இந்த படத்தில் கவினுக்கு ஜோடியாக 'அயோத்தி' படத்தின் மூலம் பிரபலமடைந்த நடிகை பிரீத்தி அஸ்ரானி நடித்துள்ளார். ரோமியோ பிக்சர்ஸ் ராகுல் தயாரிப்பில் உருவாகும் இப்படம் தமிழ், தெலுங்கு , இந்தி உள்ளிட்ட மொழிகளில் வெளியாக உள்ளது. இதற்கிடையில் இப்படத்தின் டீசர் மற்றும் பாடல்கள் வெளியானது.

இந்நிலையில் இப்படத்தின் ரிலீஸ் குறித்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. அதன்படி, வருகிற ஜூலை மாதம் இப்படம் வெளியாக உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# விரைவில் சந்திக்கிறேன்...சென்னை வீரர் வெளியிட்ட பதிவு



பஹல்காம் தாக்குதலை அடுத்து இந்தியா பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் நிலவி வந்தது. இதன் காரணமாக இந்தியாவில் நடந்து வந்த 18வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் ஒருவார காலம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. தொடர்ந்து போர் பதற்றம் தணிந்ததை தொடர்ந்து அணி நிர்வாகிகள், ஒளிபரப்புதாரர்கள், பாதுகாப்பு முகமைகள் உள்ளிட்ட சம்பந்தப்பட்டவர்களுடன் ஆலோசனை நடத்திய இந்திய கிரிக்கெட் வாரியம் ஐ.பி.எல். போட்டி வருகிற 17ந்தேதி மீண்டும் தொடங்கும் என அறிவித்துள்ளது. 13 லீக் ஆட்டங்கள் மற்றும் இறுதிப்போட்டி உள்பட 4 பிளேஆப் சுற்று என மொத்தம் 17 ஆட்டங்கள் நடத்தப்படுகிறது. மாற்றப்பட்ட புதிய அட்டவணைப்படி இரண்டு நாளில் இரு ஆட்டங்கள் இடம் பெறுகிறது. மே 29ந்தேதி இறுதிப்போட்டிக்கான முதலாவது தகுதி சுற்றும், மே 30ந்தேதி வெளியேற்றுதல் சுற்றும், ஜூன் 1ந்தேதி இறுதிப்போட்டிக்கான 2வது தகுதி சுற்றும், ஜூன் 3ந்தேதி இறுதிப்போட்டியும் நடைபெறுகிறது.

இந்த நிலையில் ஐபிஎல் நிறுத்தப்பட்டதால் நாடு திரும்பிய வெளிநாட்டு வீரர்கள் அவர்களது அணியில் இணைய உள்ளனர். இந்த நிலையில் சென்னை வீரர் டேவால்ட் பிரேவிஸ் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் உங்களை விரைவில் சந்திக்கிறேன் என தெரிவித்துள்ளார்.

சென்னை அணி அடுத்த போட்டியில் வரும் 20ம் தேதி ராஜஸ்தான் அணியுடன் மோத உள்ளது .

# விஜய் ஆண்டனியின் மார்கன் பட ரிலீஸ் தேதி அறிவிப்பு




விஜய் ஆண்டனி ஆரம்பத்தில் இசையமைப்பாளராக திரைத்துறையில் நுழைந்தவர். பின்னர் நடிப்பதிலும் ஆர்வம் கொண்டு "சலீம், இந்தியா பாகிஸ்தான், பிச்சைக்காரன்" உள்ளிட்ட படங்களின் மூலம் ரசிகர்கள் மத்தியில் பிரபலமடைந்தார்.

இவர் தற்போது 'அட்டக்கத்தி, பீட்சா, சூது கவ்வும், இன்று நேற்று நாளை, மாயவன்' உள்ளிட்ட படங்களில் எடிட்டராக பணிபுரிந்த லியோ ஜான் பால் இயக்கத்தில் புதிய படம் ஒன்றில் நடித்துள்ளார். இப்படத்திற்கு மார்கன் என்று பெரியடப்பட்டுள்ளது.

இந்த படம் கிரைம் திரில்லர் கதைக்களத்தில் உருவாகியுள்ளது. இந்த நிலையில் இப்படத்தின் ரிலீஸ் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது, வருகிற 27ம் தேதி 'மார்கன்' திரைப்படம் திரையரங்குகளில் வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.